ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1778/32 - 2012 ඔක්තෝබර් මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.10.04

*1778/32 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்துவாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம், அப் பிரிவின் கீழ், 2012 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆந் திகதிய 1757/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் இறுதியாகத் திருத்தப்பட்டதுமான, 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் 5 ஆந் திகதிய 1465/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையிலுள்ள அட்டவணையில் 28 ஆம் பிரிவினை உடனடுத்து பின்வரும் புதிய விடயமொன்றினை மேலதிகமாக சேர்ப்பதன் மூலம் திருத்தப்படுவதாக இத்தால் கட்டளை ஆக்குகிறேன்.*

**அட்டவணை**

*" 29. ஏதேனும் பங்கின் ஆரம்ப விநியோகம் மீதான பங்குச் சான்றிதழ் :*

- ஒரு கம்பனி இன்னொரு கம்பனிக்கு இரண்டு கம்பனிகளும் இலங்கை அரசாங்கத்தினால் உடமையாகக் கொள்ளப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் ; அல்லது
- *2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உபாய அபிவிருத்திக் கருத்திட்ட சட்டத்தின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ள கம்பனியொன்று இலங்கை அரசாங்கத்தினால் சொந்தமாக்கப்பட்ட கம்பனியொன்றுக்கு'.'*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2012, செத்தெம்பர் 4.*

*10 - 831*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.